## DEPOSITION OF WITNESS

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No.58/2022**

**PW-3**

**Date :-07.05.2026.**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.மதியழகன் | Caste | |
| த/பெ. | திரு.துளசிஅய்யா | Calling | காவல் உதவி ஆய்வாளர் |
| Village | ஸ்ரீரங்கம் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 54/2026 |

அரசு தரப்பு முதல் விசாரணை-

நான் தற்போது ஸ்ரீரங்கம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு. சிவசுப்பிரமணியன் அவர்களின் கையெழுத்து எனக்கு நண்கு பரீட்சையம் வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் . வழக்கின் காலதமதத்தை கருத்தில் கொண்டு சாட்சியம் அளிக்கிறேன் . கடந்த 02.08.2022-ம் 08.30 மணிக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக திரு. சிவசுப்பிரமணியன் அவர்கள் பணியில் இருந்தபோது ஸ்ரீரங்கம் ரயில்வே ஸ்டேசன் ரோட்டைச் சேர்ந்த முரளி மகன் பிரகாஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 933/2022 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 387, 506 (2) இதசவின்கீழ முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் . **அந்த புகார் மனு அ.சா.ஆ-2 ஆகவும் அந்த முதல் தகவல் அறிக்கை அ .சா.3 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** பின்னர் அன்யை தினம் காலை 9 மணிக்கு சம்பவம் இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் கிஷோர்குமார், மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் . **அந்த**

பார்வை மகஜர் ஆவணம் ,. அ.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.ச.ஆ.5 ஆகவும் குறியிடுசெய்யப்படுகிறது. பின்னர் அன்றைய தினம் காலை 09.30 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய வழக்கு சொத்தான சுமார் 40 செ.மீ நீளமுள்ள பிச்சுவா கத்தி ஒன்று கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஆவணம் அ.ச.ஆ.6 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.

பின்னர் மேற்படி வழக்கு சொத்தை படிவம் -91 ன்மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். அந்த படிவம் -91 அ.ச.ஆ.7 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. வழக்கு சொத்தான சுமார் 40 செ.மீ நீளமுள்ள பிச்சுவா கத்தி ஒன்று அ .சா..பொ.1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் கடந்த 02.08.2022 ம் தேதி 12.00 மணிக்கு ஸ்ரீரங்கம் தேவி தியேட்டர் அருகில் எதிரி ராஜேஷ்குமார் என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து உரிய சட்டநடைமுறைகளை பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் சாட்சிகள் பிரகாஷ் , புவனேஷ்வரி, இளவரசன், பழனிசாமி, கிஷோர்குமார், மாரிமுத்து ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் . பின்னர் இவ்வழக்கில் உதவி ஆய்வாளர் திரு . சிவசுப்பிரமணியன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை–

பொய்யான புகாரை பெற்று முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல .சாட்சிகள் வாக்குமூலம் சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன தேதியில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல . எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-xxxxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-K.Vijai Rajesh.,

District Munsif – Cum - Judicial Magistrate,

***Srirangam.***